மலிவான அரசியல் செய்வதை விடுத்து

# ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சித் தலைவராக செயல்படுங்கள்!

## எடப்பாடி பழனிச்சாமிக்கு - அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டனம்!



சென்னை, பிப். 7 -

பாம் வைப்பதும் நானே எடுப்பதும் நானே என்ற கணக்கில் அவசர அவசரமாக எடப்பாடி ட்வீட் செய்வதும், அதனை அதிமுகவினர் பரப்புவதும் குற்றவாளி அதிமுகதான் என்ற உண்மை வெளியானவுடன் அமைதி காப்பதும் என ஒரே ‘பேட்டர்ன்’தான். இப்படி மலிவான அரசியல் செய்வதை விடுத்து ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சித் தலைவராக செயல்படுங்கள் என சட்டத்துறை அமைச்சர் ரகுபதி எக்ஸ் தள பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது எக்ஸ் தள பதிவு வருமாறு :

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகில் வளையமாதேவியில் டாஸ்மாக் பாரில் கள்ளச்சாராயம் விற்கப்படுவதாக வீடியோ ஒன்று வெளியானது. அதனை எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் பதிவில் வெளியிட்டு ‘அய்யகோ, திமுகவை பாருங்கள்’ என்று எழுதியிருந்தார்.

இந்த வீடியோவின் உண்மைத்தன்மையை ஆராய்ந்தால் வீடியோவை வெளியிட்டது அ.தி.மு.க.வின் அண்ணா தொழிற்சங்க வட்ட செயலாளராக இருந்த ராஜாவின் உறவினரான ரவி என்பவர் என்பதும் அவருக்கு கள்ள சாராயம் வாங்கி வந்து கொடுத்ததே அ.தி.மு.க.வின் ராஜா தான் என்பதும் விசாரணையில் தெரிய வந்து அந்த அ.தி.மு.க. பிரமுகர் ராஜா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில நாட்களாக எடப்பாடி முன்வைத்த குற்றச்சாட்டுகளான அண்ணா நகர் பாலியல் வழக்கு, காரில் திமுக கொடிகட்டிய ரவுடிகள் தொடங்கி நேற்றைய கள்ளச்சாராய வீடியோ வரை குற்றச்சாட்டுகள் அனைத்திலும் அடுத்த நாளே அவர்கள் அ.தி.மு.க.வினர் எனத் தெரிய வருகிறது; கைது செய்யப்படுகிறார்கள்

பாம் வைப்பதும் நானே எடுப்பதும் நானே என்ற கணக்கில் அவசர அவசரமாக எடப்பாடி ட்வீட் செய்வதும், அதனை அ.தி.மு.க. வினர் பரப்புவதும் உண்மை வெளியானவுடன் அமைதி காப்பதும் என ஒரே ‘பேட்டர்ன்’தான். ஒரு அஜெண்டாவுடனேயே செயல்பட்டு வருகிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் என்பது அரசியலில் முக்கியமான பொறுப்பு. ஆனால் சொந்த கட்சியினர் ஒரு குற்றத்தில் ஈடுபட்டது தெரிய வந்தால் உடனே

அரசை குறை கூறி ஒரு அறிக்கையை வெளியிட்டு அந்த சம்பவத்தையே திசை

மாற்றி மக்களை குழப்பம் பணியைத்தான் எடப்பாடி செய்து வருகிறார். ஒருவேளை ‘செட்டிங்’ செய்கிறார்களோ என்றும் சந்தேகம் வருகிறது. இப்படிப்பட்ட மலிவான அரசியல் செய்வதை விடுத்து எடப்பாடி பழனிச்சாமி ஆக்கப்பூர்வமான எதிர்க் கட்சித் தலைவராக செயல்படுவாரா?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

உழவர் பெருமக்களுக்காகவே வாழ்ந்த உத்தமரான – அய்யா

# நாராயணசாமி நாயுடுவின் கனவுகளை நிறைவேற்ற தொடர்ந்து உழைப்போம்!

## பிறந்தநாளையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

நெல்லை, பிப்.7–

**அய்யா நாராயணசாமி நாயுடு அவர்களின் பிறந்த நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:–**

உழவர் பெருமக்களுக்காகவே வாழ்ந்த உத்தமரான அய்யா நாராயண சாமி நாயுடு அவர்களது நூற்றாண்டில் அவரது தியாகத்தையும் புகழையும் போற்றுவோம்!

அவரது நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில்,

- துடியலூர் கோவில்பாளையம் இணைப்புச் சாலையில் அமைக்கப்பட்டு வரும், குருடம்பாளையம் என்.ஜி.ஓ. காலனி இரயில்வே மேம்பாலத்திற்கு அவரது பெயர் சூட்டப்படும்
- அவர் பிறந்து வாழ்ந்த வையம் பாளையத்தில் நூற்றாண்டு நினைவு வளைவு அமைக்கப்படும் ஆகிய அறிவிப்புகளைச் செய்திருக்கிறேன்.

அய்யா நாராயணசாமி நாயுடு அவர்களின் கனவுகளை நிறைவேற்றத் தொடர்ந்து உழைப்போம்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

மோடியின் தவறான செயல்பாடுகளால்

# இந்தியாவின் உற்பத்தி கடும் வீழ்ச்சி!

## ராகுல் காந்தி எம்.பி. குற்றச்சாட்டு!

புதுடெல்லி, பிப். 7 -

பிரதமர் மோடியின் தவறான செயல்பாடுகளால் இந்தியாவின் உற்பத்தித் துறை கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத வகையில் வீழ்ச்சி அடைந்துள்ளதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டி உள்ளார்.

இது குறித்து சமூக வலைதளப் பதிவொன்றை வெளியிட்டுள்ள ராகுல் காந்தி, பிரதமர் மோடி தனது உரைகளில் தற்போது “மேக் இன் இந்தியா” என குறிப்பிடுவதையே நிறுத்தி விட்டதாக விமர்சித்துள்ளார். “மேக் இன் இந்தியா” திட்டம் நல்ல முயற்சியாக இருந்தாலும், அது தோல்வியடைந்துவிட்டதை பிரதமர் ஒப்புக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ள ராகுல் காந்தி, 2014 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.3 சதவீதமாக இருந்த உற்பத்தித்துறை தற்போது 12.6 சதவீதமாக குறைந்துள்ளதாகவும், இது கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத வீழ்ச்சி என்றும் தெரிவித்துள்ளார்.

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் மிகவும் அவசியமானவை என்றும், அண்மைக்காலங்களில் தேசிய அளவிலான இந்த சவாலை நம்மால் எதிர்கொள்ள முடியவில்லை என்றும், நமது உற்பத்தித் துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியை தடுப்பதற்கும், எதிர்கால உலகப் பொருளாதாரத்தை போட்டியுடன் அணுகுவதற்கு உற்பத்தித்துறையை தயார்படுத்தவும் ஒரு தொலைநோக்குப் பார்வை தேவை என்றும் தெரிவித்துள்ளார். மின் மோட்டார்கள், பேட்டரிகள் மற்றும் ஏஐ போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் நாம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும் என்றும், நமது உற்பத்தித் துறையை மீட்டெடுக்கவும், அதிநவீன உற்பத்தித் திறனை வளர்க்கவும், தேவையான வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் இதுமட்டுமே ஒரே வழி என்றும் ராகுல் காந்தி பதிவிட்டுள்ளார்.

---

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை

# உத்திரமேரூரில் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. சிறப்புரை! க.செல்வம் எம்.பி. பங்கேற்பு!

காஞ்சிபுரம், பிப். 7-

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக் கூட்டம் நாளை (8.2.2025 சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு கே.எம்.ஆர். பேருந்து நிலையம், உத்திரமேரூரில் நடைபெறுகின்றது. இம்மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தலைமை வகிக்கிறார். ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

மாவட்ட அவைத் தலைவர் ச.இனியரசு, மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.வீ.கோகுல கண்ணன், மலர்விழி குமார், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே. ஆறு முகம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் பி.சசிகுமார், ஒன்றியக் குழுத் தலைவர் ஹேமலதா ஞான சேகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக மக்களவைக் குழுத் தலைவர்கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. கண்டன உரை நிகழ்த்துகிறார். மேலும் சிறுவேடல் க. செல்வம் எம்.பி. கலந்து கொண்டு பேசுகிறார்.

இதில் மாநில கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., மாநில கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல்மாலிக், மேயர் மகாலட்சுமி யுவராஜ், செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் செம்பருத்தி துர்கேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.நாராயணன், கழக மருத்துவர் அணி மாநில துணைச் செயலாளர் டாக்டர் ஆர். டி.அரசு, எம்.எஸ்.சுகுமார், கழக தொண்டரணித் தலைவர் ஜி. சுகுமாரன், கழக நெசவாளர் அணி செயலாளர் தி. அன்பழகன், கழக வர்த்தகர் அணி துணைச் செயலாளர் பெ.சுந்தரவர தன், கழக வர்த்தகர் அணி துணைச் செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன்,

மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் சி.கே.வி.தமிழ்செல்வன், கு.குமார், டி.குமார், க.குமணன்,பி.சேகர், பி. எம்.குமார், பி.எம்.பாபு, கே.கண்ணன், ஜி.தம்பு, பி.எச்.சத்தியசாய், பொன். சிவக்குமார், கே.எஸ்.ராமச் சந்திரன், வி.ஏழுமலை, இ.சரவணன், ஏ.சிற்றரசு, எம்.எஸ்.பாபு, எஸ்.சந்துரு, கே.திலகர், அ.தசரதன், சு. வெங்கடேசன், என்.பாண்டியன்,டி.மோகன்தாஸ், வி.டி.ஆர்.வி.எழிலரசன், ஏ.சுந்தரமூர்த்தி,

பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, எழிலரசி சுந்தரமூர்த்தி, வெளிக்காடு வே.ஏழுமலை, எஸ்.டி.பிரேம் சந்த், எஸ்.உசேன், எஸ்.கே. ராஜேந்திரன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அ.யுவராஜ், எஸ்.குணசேகரன்,ஏ.செல்வி, எஸ். மாலதி, எஸ்.எம். ஜியாவுதின், வி.திவாகர், ஏ.கே.ரமேஷ்,ஓ. எஸ்.தினகரன், பி. கார்த்திகேயன், ஏ. நூருல்அமீன், ஆர். இரங்கநாதன், வி.புருஷோத் தமன், கே. நாகராஜன், ஏ.என். பாரத், நாகராஜன், எஸ். கண்ணதாசன், ஆ.சசி குமார், டி.எஸ்.ரமேஷ், சி.பி. ராதாகிருஷ்ணன், வி.மலர்மன்னன், இ.அசோகன், டி.வெங்கட்ராமன், டி.ஜெய்கணேஷ்,

உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் நித்யா சுகுமார், ஆர்.கே. தேவேந்திரன், மலர்கொடி குமார், சாந்தி இராமச்சந்திரன், இல்லாமல்லி, சம்யுக்தா அய்யனார், நந்தினி கரிகாலன், கோ.தசரதன், எஸ். மோகன், சாந்தி சீனிவாசன், சசிகலா ஆறு முகம், உத்திர மேரூர் ஒன்றிய பேரூர் நிர்காவிவள் பத்மாபாபு, இளமதி கோவிந்தராஜ், இரா.மணி, கோ.காளிதாஸ், கே. தயாளன், தே.வீராசாமி, எம்.பி.தாமஸ், ஏ.மூர்த்தி, கி.கண்ணாயிரம், லோ. பவ்யா, சந்தியா, து.சுந்தர், மு. தாமேதரன், ஆ.நில கண் டன், தா.சுப்பராயன், எஸ்.ருத்திர கோட்டி, சு.சுகுணா சுந்தர்ராஜன், கெங்கன்,தே.பாபு குமார் தேவ், இரா.கார்த்திகேயன், க.மாயகிருஷ்ணன், து. ரமேஷ், ஏ.வீரமணி, பி. மகேந்திரன், ஆ.ஜெயகாந்தா, க. அப்துல் ஹஷக்கிம், வெ. கோவிந்தராஜ், வெ. குணசேகரன், மா. கருணாநிதி, ந. ராஜேந்திரன், ஏ. செல்லமுத்துவி.ராஜ பாண்டி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரி வள்ளல் நன்றி கூறுகிறார்.

---

# ரூ.3,000 செலுத்தினால் ஓராண்டுக்கு சுங்கக்கட்டணம் செலுத்த தேவையில்லை!

புதுடெல்லி, பிப். 7 -

ஒன்றிய சாலைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்கரி வெளியிட்டுள்ள அறிக்கையில், தேசிய நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும், சுங்கச்சாவடிகளில் கூட்ட நெரிசல் ஏற்படுவதை தடுக்கும் நோக்கிலும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுவருவதாக தெரிவித்துள்ளார்.

அதன்படி, 3 ஆயிரம் ரூபாய் கட்டணம் செலுத்தி, ஆண்டு முழுவதும் சுங்கச்சாவடிகளில் கார்கள் பயணிக்கலாம் என்று தெரிவித்துள்ளார். இதேபோல், 30 ஆயிரம் ரூபாய் கட்டணம் செலுத்தி னால் 15 ஆண்டுகள் சுங்க கட்டணம் செலுத்தாமல் சுங்கச்சாவடிகளில் பயணிக்கும் திட்டம் விரைவில் அறிமுகம் செய்யப்படும்என்றுஅவர்குறிப்பிட்டுள்ளார். 340 ரூபாய் கட்டணம் செலுத்தினால் மாதம் முழுக்கவும், 4 ஆயிரத்து 80 ரூபாய் கட்டணம் செலுத்தினால் ஆண்டு முழுக்கவும் சுங்கச்சாவடி களில் கட்டணம் செலுத்தாமல் செல்லலாம் என்ற திட்டத்தில் பயனடைந்தவர்களுக்கு, இந்த புதிய திட்டம் மூலம் மாதம் ஆயிரத்து 80 ரூபாய் மிச்சமாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இத்திட்டம் மூலம் பல லட்சக்கணக்கானோர் பயன் பெறவுள்ளார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார். புதிய திட்டம் மூலம் கட்டணம் செலுத்தி பெறப்படும் அட்டைகள், Fastag அட்டையுடன் இணைக்கப்படும்.






திருநெல்வேலி மாவட்டம்

ரூ.1,061 கோடியில்
தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு உபரி நதிநீர் இணைப்பு வெள்ளநீர் கால்வாய் திட்டம் தொடங்கி வைத்தல்

ரூ.180 கோடியில் சுத்தமல்லி முதல் கொங்கந்தான்பாறை விலக்கு வரை திருநெல்வேலி மேற்கு புறவழிச்சாலை தொகுதி - I திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

மற்றும்

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தலைமை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு உபரி நதிநீர் இணைப்பு வெள்ளநீர் கால்வாய் தலை மதகு

அரசு நலத்திட்ட உதவிகள்

ரூ.309 கோடி மதிப்பிலான 20 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

ரூ.1,371 கோடியில் 24 முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தல்

ரூ.167 கோடியில் 75,151 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

நாள் : 7.2.2025 வெள்ளிக்கிழமை, காலை 9.30 மணி

இடம் : அரசு மருத்துவக் கல்லூரி மைதானம், திருநெல்வேலி

சொன்னதைச் செய்யும் நம் முதல்வர் !

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009.

செ.ம.தொ.இ./120/வரைகலை/2025